www.manthiras.com

**பின்வரும் பாடல்களை பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி தன் தாய் முக்தி பெறவேண்டி ஸ்ரீ அருணாசலர்மீது மனமுருகிப் பாடினார்.**

**நீங்களும் உங்கள் தாயோ மற்ற தாய்மார்களோ உடல்நலம் குன்றியிருக்கும் சமயத்தில், இந்தப் பாடல்களை ரமணரையும் அருணாசலரையும் நினைந்து மனமுருகிப் பாடினால் உங்கள் தாயின் உடல்நலம் நிச்சயம் சீராகும்.**

அலையாய் வரும் பிறவி அத்தனையும் மாற்ற
மலையாய் எழுந்த மருந்தே தலைவா நின்
தாள்கதியாய் வாழும் என் தாய் தாபமாற்றியே
ஆள்வதுவும் உன் கடனேயாம்!

காலகாலா உன் கமல பதம் சார்ந்த
பாலன் என் ஈன்றாள்பால் அந்தக் காலன்தான்
வாராவகை உன் கால் வாரிசமே காட்டுவா
யாராயிற் காலனுமே யார்?

ஞானாங்கியாய் ஓங்கு நல்ல குணவோங்கலே!
ஞானாங்கியாய் அன்னை நல்லுடலை ஞானாங்கமாகச்
செய்து உன் பதத்தில் ஐக்கியமாக்கிக் கொள்வாய்
சாகத்தீ மூட்டுவதேன் சாற்று.

மாயா மயக்கமதை மாற்று அருணமாமலை
என் தாயார் மயக்ககற்ற தாமதமேன் தாயாகித்
தன்னை அடைந்தார் வினையின் தாக்கறுத்து ஆள்வார்
உலகில் உன்னையல்லால் உண்டோ உரை.